சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 16.12.2025 SC. 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மீனா | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 5 | | | |

---

முதல் விசாரணை

நான் கூடலூர், சுக்காங்கல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 01.03.2022 வருடம் இரவு 8.30 மணியளவில் நானும், என் கணவரும் எங்கள் வீட்டில் மாடியில் இருந்தோம். கீழே ஏதோ சத்தம் கேட்டது. என்ன என்று பார்த்தபோது, சிவாஜி, ஸ்டாலின், ஜோதி, சீனா, ரஷ்யா, சிங்கம், மணவாளன் ஆகியோர் பிரச்சனை செய்து கொண்டிருநதார்கள். கெட்டவார்த்தைகளால் பேசி கொண்டிருந்தார்கள். சொத்தை பேரனுக்கு எழுதிவைக்க சொல்லி, வெளியில் வைத்து பிரச்சனை செய்ததால் வீட்டிற்கு வந்து பேசுமாறு என் மாமா கூறினார். அப்போது, ஜோதி அவரது மகன் ஸ்டாலினை பார்த்து அவரை வெட்டு என கூறியதால் என்னிடம் காட்டப்படும் அரிவாளை கொண்டு என் கொழுந்தன் அரவிந்த் கழுத்தில் வெட்டமுயற்சித்தபோது அவர் இடது கையால் அரிவாளை தடுத்தார். அப்போது அவர் கை மணிகட்டிற்கு கீழே வெட்டுப்பட்டு கீழே விழுந்து விட்டது.

உடனே என் மாமனார் ராஜா சம்பவத்தை தடுக்க சென்ற போது, 2ம் எதிரி சிவாஜி 3ம் எதிரி ஜோதி இருவரும் அவரை இறுக்கமாக பிடித்துக்கொண்டு இவனையும் வெட்டிக் கொல்லு என்று சொன்னபிறகு ஸ்டாலின் அவரையும் கழுத்தை நோக்கி வெட்டினார். அவர் இடது கையால் தடுத்ததால் கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. என் மாமனார் கீழே விழுந்ததும் சிவாஜி, சிங்கம், மணவாளன் ஆகியோர்கள் அவரை கீழே தள்ளி அடித்தும், மிதித்தார்கள். அப்போது ஜோதி, சீனா, ரஷ்யா ஆகியோர்கள் என் மாமியார் வனிதாவை கையால் அடித்தார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்து சத்தம் போடவும் எதிரிகள் ஓடிவிட்டார்கள். பின்னர் நாங்கள் என் கொழுந்தன் அரவிந்த் கை வெட்டுப்பட்டு கிடந்ததை எடுத்து வேகமாக கம்பம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அவரையும், என்

மாமனாரையும் அழைத்துச்சென்றோம். கை வெட்டுப்பட்டு விழுந்ததால் நாங்கள் தனியார் மருத்துமனையில் சிகிச்சைக்காக வேண்டி மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு சென்றோம். ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு சம்பந்தமா போலீசார் என்னை விசாரித்தார்கள்.

ஓம். M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 16.12.2025 SC. 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேமா தேவி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 6 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் கூடலூரில் 4 வது வார்டு சுக்காங்கல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 01.03.2022 ம் தேதியில் சுமார் இரவு 8.30 மணியளவில் அ.சா.1,2 ராஜா, அரவிந்த் வீட்டிற்கு கீழ்புறம் எங்கள் வீடு உள்ளது. அப்போது நாங்கள் மல்லிகா அக்கா வீட்டில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அங்கு ராஜா வீட்டு முன்பு பிரச்சனை நடைபெற்றது, அங்கு சிவாஜி, ஸ்டாலின், மணவாளன் மொத்தம் 4 ஆண்களும், 3 பெண்களும் வந்து பிரச்சனை செய்தார்கள். அப்போது அவர்களுக்குள் பிரச்சனை செய்து என்னிடம் காட்டப்படும் அரிவாளைக்கொண்டு ஸ்டாலின், அரவிந்த்தை வெட்டினார். அப்போது அரிவாளை தடுத்தபோது அவர் இடது கை துண்டாகிவிட்டது. உடன் அவர் தந்தை ராஜா தடுக்க சென்றபோது ஸ்டாலின் ராஜாவையும் வெட்டினார். அவருக்கும் இடது கை காயம் ஏற்பட்டது. நாங்களும், தெருக்காரங்களும் சத்தம் போடவும், எதிரிகள் ஓடிவிட்டார்கள். அரவிந்த் அம்மாவை 3 பெண்களும் சேர்ந்து அடித்தார்கள். அதன் பின்னர் மித்ரன் என்பவரும், சுரேந்தரனும் அரவிந்த் மற்றும் அவரது தந்தையும் கம்பம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்க்ள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

ஓம். M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 16.12.2025 SC. 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW7 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் கூடலூர் சுக்காங்கல்பட்டி, 4 வது வார்டில்குடியிருந்து வருகிறேன். கடந்த 01.03.2022 ம் தேதியில் சுமார் 8.30 மணிக்கு நான் RMTC யில் வேலை முடித்து விட்டு எனது வீட்டிற்கு வந்தேன். அரவிந்த், ராஜா வீடு என் வீட்டிற்கு மேல்பக்கம் உள்ளது. அப்போது ஸ்டாலின், சிவாஜி, ஜோதி, ரஷ்யா, மணவாளன், மொத்தம் 7 நபர்கள் வந்து பிரச்சனை செய்தார்கள். அப்போது அரவிந்த்தை நோக்கி ஸ்டாலின் கழுத்தை நோக்கி வெட்டும்போது அவர் தனது இடதுகையால் தடுத்தார். அப்போது கை இரண்டாக துண்டாகிவிட்டது. ராஜாவை ஸ்டாலின் வெட்டினார். அவருக்கும் இடது கை காயம் ஏற்பட்டது. வனிதாவை 3 பெண்களும் மாறி மாறி கையால் அடித்தார்கள். அதன் பின்னர் அரவிந்த்தையும், அவரது தந்தையையும், வனிதாவையும் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

ஓம். M.சிவாஜி செல்லையா<br>
சார்பு நீதிபதி<br>
உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 16.12.2025 SC. 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வனிதா | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW8 | | | |

---

முதல் விசாரணை

நான் கூடலூர், சுக்காங்கல்பட்டி, 4 வது வார்டில் குடியிருந்தது வருகிறேன். கடந்த 01.03.2022ம் தேதி சுமார் இரவு 8.30 மணியளவில் எங்கள் வீட்டிற்கு 7 நபர்கள் வந்தார்கள், சிவாஜி, ஜோதி, ஸ்டாலின், சீனா, ரஷ்யா, மணவாளன், சிங்கம் வந்து வெளியே நின்று என் மகன் அரவிந்திற்கும், அவர் மனைவி சீனாவிற்கும் குடும்ப பிரச்சனை இருந்து வந்தது. ஜோதி வந்தவுடன் அவரது மகன் ஸ்டாலினிடம் அரவிந்தை வெட்டுடா என என்னிடம் காட்டப்படும் அரிவாளை வைத்து வெட்டசொன்னார். எனது மகன் அரவிந்த் இடது கையால் அரிவாளை தடுத்தபோது அவரது இடது கை துண்டாக கீழே விழுந்துவிட்டது. என் கணவர் அரவிந்திற்கு வெட்டுப்பட்டவுடன் அதை தடுப்பதற்காக ஓடிவந்தார். அப்போது சிவாஜியும், ஜோதியும் என் கணவரை பிடித்துக்கொண்டு ஸ்டாலினை பார்த்து வெட்ட சொன்னார்கள். ஸ்டாலின் என் கணவர் இடது கையிலும் வெட்டினார். அதன்பின்னர் மணவாளன், சிங்கம், சிவாஜி ஆகியோர்கள் என் கணவரை கீழே தள்ளி தொடர்ச்சியாக அடித்தார்கள். என்னையும் ஜோதி, சீனா, ரஷ்யா ஆகியோர்கள் என்னையும் கீழே தள்ளி அடித்தார்கள். நாங்கள் 3 பேர்களும் சத்தம் போடவும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். என் கொழுந்தன் மகன் மித்ரனும், என் மூத்த மகன் சுரேந்திரனும், கம்பம் அரசு மருத்துவமனைக்கு வந்து முதலுதவி சிகிச்சை எடுத்து என் மகன் அரவிந்த் கை துண்டாகிவிட்டதால் மேலுதவி சிகிச்சைக்காக தனியார் அரசு மருத்துவதனைக்கு தான் கொண்டு செல்லவேண்டும் என்பதால் மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

ஓம். M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்